
# அறுவடை

# A/L Day 2008




**Sammanthurai Muslim Madya Maha Vidyalayam**
**(National School)**
**Sammanthurai**

www.smmmmvns.sch.lk

0065

# க.பொ.த உயர் தர மாணவர் தின

# சிறப்பு மலர்

**29-07-2008**

முஸலிம் மத்திய மஹா வித்தியாலயம்
தேசிய பாடசாலை
சம்மாந்துறை
067-2260024

# வரவேற்புக் கீதம்

வருக வருக வருக வருக
வாழ்த்துக் கூறி உம்மை
வரவேற்கின்றோம்
A/L தினம் எளிலாய் சிறக்க
கவிப் பூக்கள் தூவி
நாங்கள் வரவேற்கின்றோம்
அறுவடையின் அந்திம காலம்
அலங்கரிக்கும் அழகிய நேரம்
Welcome you
கல்விக்கடலில் முத்தெடுக்தோர்க்கு
முடி சூட்டும் மங்கள நாளில்
Welcome you
நம் பதி புகழ் ஓங்கும் இன்றே
இனி பார் நம் பெயர் சொல்லும் நன்றே
(வருக)

கலாச்சார அமைச்சினை
கண்போன்று காப்பவரே
அமீர் சேர் உமை வரவேற்றோம்
இம் மண்ணில் மாணிக்கமாய்
இன்னல்கள் பல தீர்தீர்
உம் சேவை என்றுமே வாழ்க
கல்வியில் எமக்காய்
கனிவுடன் உழைக்கும்
தௌபீக் சேர் உமை
அழைக்கின்றோம்
உங்களின் வருகையாலே
எம் பள்ளி என்றும் ஓங்கும்
நீர் வாழ்க
எம் கலைகள் கேள்விகள் காண்பீர்
உம் ஆசிகள் எமக்காய் தருவீர்
(வருக)

எம் பள்ளி ஓங்குதற்கும்
எம் வாழ்வு செழிப்பதற்கும்
உருகிடும் பாறூக் சேர் வருக
கல்வியில் முதலிடத்தை
கல்லிலே பொறித்தீர் எமக்காய் - உம்
கண்ணியம் உயரட்டுமே
அழைப்பினை ஏற்று
அன்புடன் வந்த
அதிதிகள் அனைவரும்
வருகவே...
இந்நாளிற்காய் நலமாய் உழைத்த
ஆசான்கள் மாணாக்கர் எல்லாம்
வரவேற்றோம்...
உங்கள் வரவால் இன்பங்கள் பெருகும்
இந்த தினமும் பெருமை பெறுமே...
(வருக)

மெட்டு :- நீயே நீயே.. தாயே நீயே

இயற்றியவர் :
எம்.ஐ. பாதிமா ஹிறாஷா
**13 B கலை 2007 / 2009**

ஆசிரியர் ஒன்றியம்

| | | |
|---|---|---|
| தலைவர் : | ஜனாப். ஏ. எல். அப்துர் றஹீம் | |
| செயலாளர்: | ஜனாப். ஏ.ஆர் எம். உவைஸ் | |
| பொருளாளர்: | ஜனாப். என்.எம். நஜீம் | |
| போஷகர்கள்: | ஜனாப். எச்.எம். பாறூக் | அதிபர் |
| | ஜனாப். யூ.எம். இப்றாஹிம் | பிரதி அதிபர் |
| | ஜனாப். கே.எம்.எஸ்.எம். தமீம் | பிரதி அதிபர் |
| | ஜனாப். பீ.எம்.எம். இப்றாஹிம் | உதவி அதிபர் |
| | ஜனாப். என். மஹ்றுப் | உதவி அதிபர் |
| | ஜனாப். எம்.எம். நிசார்தீன் | உதவி அதிபர் |

சஞ்சிகை குழு:

| | |
|---|---|
| ஜனாப். எம்.ரி. முஸம்மில் | பிரதம ஆசிரியர் |
| ஜனாப். ஏ.ஆர்.எம். அஷ்ர..ப் | |
| ஜனாப். எம்.பி. ஹசீன் | |
| ஜனாபா. யூ. அபுசாலி | |
| ஜனாபா. எம். செய்னுலாப்தீன் | |

உயர்தர மாணவர் குழு

| | | |
|---|---|---|
| தலைவர் : | எம்.ஏ.எம்.என். சஹீர் | 13 Maths |
| தலைவி : | எம்.ஆர்.எப். றிஷாதா | 13 Arts B |
| செயலாளர்: | எம்.டி. முஜஹிடீன் | 12 Arts B |
| உப செயலாளர்: | எம்.ஐ.எப். ஹிறாஸா | 13 Arts B |
| பொருளாளர்: | எம்.ஐ.எம். அர்சாத் | 12 Arts B |

குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| ஏ.ஐ.எம். ஸமீர் | 13 Arts B |
| எம்.எஸ்.எப். றிபாஸ் | 13 Arts B |
| ஏ.எஸ்.எம். அஸ்ரப் | 13 Arts A |
| ஏ.எம்.எம். பாரிஸ் | 13 Commerce |
| எம்.ஐ. தாரிக் | 12 Arts C |
| எம்.ஐ.எம். பெரோசான் | 12 Maths |
| எம்.எல்.எம். கியாஸ் | 12 Maths |
| எம்.ஐ.எப். றஹ்னாஸ் | 13 Arts B |
| எம்.எஸ். பர்னாஸ் பேகம் | 13 Arts B |
| ஏ.எப். நுஸ்லா | 13 Arts A |
| ஏ.ஆர். கதிஜா | 13 Arts B |
| எஸ்.டி. றக்ஷானா | 12 Arts C |
| எல்.டி. பர்னாஸ் | 12 Arts A |
| ஏ.எம்.ஐ. தூபா | 12 Bio |

## உயர்தர ஆசிரியர் குழாம் - 2008

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப். எம்.எம். நிசார்தீன் (உதவி அதிபர்) | - | இணைந்த கணிதம் |
| 02. | ஜனாப். ஏ.எல்.ஏ. றஹீம் (பகுதித்தலைவர்) | - | இணைந்த கணிதம் |
| 03. | ஜனாப். எஸ்.எம். சமூன் (பகுதித்தலைவர்) | - | கணக்கீடு |
| 04. | ஜனாபா. எம். செய்னுலாப்தீன் | - | பொருளியல் |
| 05. | ஜனாபா. ஜே. செய்னுடீன் | - | உயிரியல் |
| 06. | ஜனாபா. யூ. அபூசாலி | - | தமிழ் |
| 07. | ஜனாபா. ஜே. இப்றாலெப்பை | - | இரசாயனவியல் |
| 08. | ஜனாப். ரீ.எம். ஹனீபா | - | பொருளியல் |
| 09. | ஜனாப். எச்.எம். அன்வர் அலி | - | அரசியல் மூலதத்துவம் |
| 10. | ஜனாப். ஏ.எம்.ஏ. கரீம் | - | விவசாய விஞ்ஞாணம் |
| 11. | ஜனாபா. ஜே.எஸ்.எம். நஸீர் | - | அளவையியலும் விஞ்ஞானமும் |
| 12. | ஜனாப். எப்.யு.ஏ. றாசிக் | - | உயிரியல் |
| 13. | மௌலவி. எம்.ஐ. ஹஜ்ஜி முஹம்மட் | - | இஸ்லாம் |
| 14. | அஷ்ஷேஹ் ஏ.ஆர்.எம். அஷ்ர.்.ப் ஹாபிஸ் | - | இஸ்லாம், இஸ்லாமிய நாகரீகம், அரபு |
| 15. | ஜனாப். ஏ.ஆர்.எம். அஜ்வத் அலி | - | வணிகக்கல்வி |
| 16. | ஜனாப் எம்.சீ. பர்சான் | - | பௌதீகவியல் |
| 17. | ஜனாபா. எஸ்.ரீ. சித்தி றயிஸா | - | இரசாயனவியல் |
| 18. | ஜனாபா. ஏ. பாதிமா நஹ்றார் | - | பொது ஆங்கிலம் |
| 19. | ஜனாப். எம்.ரீ. முசம்மில் | - | தமிழ் |
| 20. | ஜனாப். என்.எம். நஜீம் | - | பௌதீகவியல் |
| 21. | அஷ்ஷேஹ் ஏ.ஆர்.எம். உவைஸ் | - | இஸ்லாம் |
| 22. | ஜனாப். எம்.பி. ஹசீன் | - | பொது தகவல் தொழிநுட்பம் |
| 23. | ஜனாபா. பீ.ஏ. அஸீஸ் | - | மனைப்பொருளியல் |
| 24. | ஜனாப். கே. எம். தில்சாத் | - | சித்திரம் |
| 25. | ஜனாப். ஏ.எல். ஜவ்பர் | - | பொது தகவல் தொழிநுட்பம் |

குறிப்பு: எங்கள் உயர்தர ஆசிரியர் ஒன்றியத்தில் ஒருவராக இருந்து கடந்த பல வருடங்களாக உயர்தர தின விழாக்களை சிறப்பிக்க கடுமையாக உழைத்த சகோதரர் எம்.எம். ஜ.்.பர் ஆசிரியர் அவர்கள், வலயக் கல்விப் பணிமனைக்கு தகவல் தொழில் நுட்ப ஆசிரிய ஆலோசகராக பதவி உயர்வு பெற்று சென்றுள்ளார். அவரை வாழ்த்தி கௌரவிப்பதில் எங்களது ஒன்றியம் மகிழ்வடைகின்றது.

**சமய விவகார, ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.ஐ. அமீர் அவர்களின் ஆசிச் செய்தி :**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்,

அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனது தூதர் 'ரஹ்மதுந் லில் ஆலமீன்' முஹம்மத் (ஸல்) அவர்களின் மீது ஸலவாத் கூறியவனாக ஆரம்பிக்கின்றேன்.

இந்த செய்தியை நான் எழுத ஆரம்பிக்கின்ற போது, உங்களைப் போன்று ஒரு மாணவனாக எழுபதுகளில் இப்பாடசாலையில் நான் கல்வி கற்றுக் கொண்டிருந்தவேளை எனது ஆளுமை விருத்திக்கும் கற்றல் செயற்பாடுகளுக்கும் உரமூட்டிய ஆசான்கள் எனது கண்முன்னே வந்து போகின்றார்கள். ஏ.எல். மஹ்றூப் சேர், பஸீல் காரியப்பர் சேர், பீ.எம். சம்சுதீன் சேர், எஸ்.எல்.ஏ. சலாம் சேர், ஜெயபாலன் சேர், வீரசிங்கம் சேர், ஆனந்தராஜா சேர், அரிய ராஜா சேர் போன்ற ஆளுமைமிக்க ஆசான்கள் என்னை புடம் போட்டவர்கள். இக்காலப் பிரிவில் அதிபர்களாக சேவையாற்றிய மரைக்கார்த்தம்பி, கோஸ் முஹம்மட், ஏ.ஆர். முஹம்மட் அலி போன்ற ஆளுமைமிக்க அதிபர்களை சற்று நினைத்துப் பார்க்கின்றேன். என்னை இந்த அளவுக்கு உயர்த்துவதற்கு ஏணிகளாக செயற்பட்ட அவர்களுக்காக அல்லாஹ்விடம் இருகரம் ஏந்துகின்றேன்.

எமது பாடசாலையின் இலட்சினையான 'கல்வி, தொழுகை, சேவை' யை நான் அடிக்கடி ஞாபகப்படுத்திப் பார்ப்பதுண்டு. இஸ்லாம் கல்விக்கு உயர்ந்த மதிப்பளிக்கின்றது. மனித சமூகத்தின் வழிகாட்டியான அல்குர்ஆன் தனது முதலாவது வாசகத்தை 'இக்ர.் - வாசிப்பீராக' என்றே ஆரம்பிக்கின்றது. ''ஒரு மணி நேரம் நல்ல சிந்தனை செய்வது ஓராண்டு வணக்கத்தில் கழிப்பதைவிடச் சிறந்தது'', ''அறிவைத்தேடி வீட்டைவிட்டு வெளியேறுபவன் அல்லாஹ்வின் பாதுகாப்பில் செல்கின்றான், மலக்குமார்கள் அவனுக்கு இறக்கை விரித்து நிழல் கொடுக்கின்றனர், அவனது பாவங்களை மன்னித்து அவனுக்கு அருள்பாலிக்கும்படி அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றனர்'' போன்ற நபிமொழிகளின் மூலம் இஸ்லாம் கல்விக்கு வழங்கும் முக்கியத்துவத்தை எம்மால் அறிய முடிகின்றது.

இறைவனைத் தொழுவதன் ஊடாகவே எமது கல்வியால் நாம் நன்மையடைய முடியும். எங்களது ஆளுமை விருத்திக்கு கல்வி உதவி செய்ய வேண்டும். கற்றல், தொழுகையில் மாத்திரம் ஈடுபடாது, தான் கற்ற கல்வியை நமது சமூகத்திற்கு எத்திவைக்கின்ற த.்வத் பணியை நாம் மேற்கொள்வதன் மூலம் எமது இலட்சனையில் பொறிக்கப்பட்ட மூன்றாவது விடயத்தையும் நாம் நிறைவேற்றியவர்களாவோம். உண்மையில் இலங்கையில் முஸ்லிம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் அல்லாஹ்வை அஞ்சிய இறையச்சமுள்ள மாணவர்களை உருவாக்குவதாகும். ஆனால் இந்த நோக்கம் நிறைவேற்றப்படுகின்றதா என்ற கேள்வியை நாம் எழுப்பியே ஆக வேண்டும்.

உண்மையில் எனக்கு மிகவும் சந்தோசம். இந்தப் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் இதனை ஒரு சவாலாக ஏற்று இன்று செயற்பட்டு வருகின்றனர். அந்தவகையில் இப்பாடசாலையில் ஷரீஆ கற்கைநெறி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு இன்று அதற்கான அரசாங்க அனுசரனை கிடைத்துள்ளமை வரலாற்றுச் சாதனையாகும். இதுபோன்று வளர்ந்த மாணவர்களை இஸ்லாமிய ஆளுமையுள்ளவர்களாக மாற்றுகின்ற வேலைத்திட்டங்களையும் இப்பாடசாலை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. ஏனெனில் அர்ப்பணிப்புடன் ஒரு குழுவாக இருந்து செயற்படுகின்ற ஆளுமைமிக்க அதிபர்கள், ஆசிரியர்கள் இப்பாடசாலையில் கடமைபுரிகின்றமை மிகவும் சிறப்பான ஒரு விடயமாகும். அத்துடன் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருப்பதும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

அல்லாஹுதஆலா எங்களின் செயற்பாடுகளை பொருந்திக் கொள்வானாக!

நன்றி!

எம்.ஐ. அமீர்,
சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
சமய விவகார, ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு,
கொழும்பு.

## வலயக் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.ரி.ஏ. தௌபீக் அவர்களின் ஆசிச் செய்தி :

சம்மாந்துறை வலயத்தின் முகவெற்றிலயாய் விளங்கும் முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் பல சாதனைகளை நிலைநாட்டிக் கொண்டு வருகின்றது. அந்தவகையில் வரலாறு காணாத அடைவுமட்டத்தை இம்முறை க.பொ.த. உயர்தரப் பிரிவு மாணவர்கள் பெற்றிருக்கின்றார்கள். இக் கல்லூரியின் எழுபத்தைந்து மாணவர்கள் இம்முறை நாட்டின் பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கும் தெரிவுசெய்யப்பட்டமை எம்மை எல்லாம் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்றது. அது மாத்திரமன்றி கல்முனை கல்வி மாவட்டத்தில் பல சாதனைகளை இக் கல்லூரி சாதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். சென்ற வருடம் இக்கல்லூரியின் மாணவர் ஒருவர் கலைத் துறையில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று எமக்கெல்லாம் புகழ் சேர்த்துத் தந்துள்ளார். அதேபோன்று க.பொ.த. சாதாரண தரத்திலும், ஐந்தாந்தர புலமைப் பரிசில் பரீட்சையிலும் சாதனை படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். கல்லூரியின் அதிபர் எச்.எம். பாறூக் மிகக் கடுமையாக உழைக்கக் கூடிய ஒருவர். இந்த அத்தனை சாதனைகளையும் அவரினதும் இக்கல்லூரியின் பிரதி அதிபர்களினதும் உதவி அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் கல்வி சாரா ஊழியர்களினதும் மாணவர்களினதும் அளப்பரிய அர்ப்பணிப்பினாலும் தியாகத்தினாலுமே சாதிக்க முடிந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாறு இருந்தபோதும், இக்கல்லூரியின் மீது தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களை காழ்ப்புணர்ச்சியுள்ள ஒரு குழுவினர் மேற்கொண்டு வருகின்றமை எமக்கு கவலையை ஏற்படுத்துகின்றது. 'காய்த்த மரத்திற்குத்தான் கல்லெறியும் பொல்லெறியும்' என்ற வசனத்தை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். சம்மாந்துறை மக்களின் கண்ணான இக்கல்லூரியின் உயர்விலும் தாழ்விலும் சமூகம் விழிப்பாக இருப்பதையிட்டு நான் சந்தோசப்படுகின்றேன். ஆரோக்கியமான விமர்சனங்களை மேற்கொள்வதன் மூலம் எமது சமூகத்தை இன்னும் இன்னும் முன்னேற்றத்தை நோக்கி வழிநடாத்த முடியும்.

இக்கல்லூரியில் சாதாரண தரத்தில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் முதல் உயர்தர ஆசிரியர்கள் வரை அனைவரும் இக்கல்லூரியின் மாணவர்களின் ஆளுமை விருத்திக்காக அர்ப்பணிப்புடன் உழைக்கின்றார்கள். கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் அவர்கள் மிகவும் சிறப்பாக ஈடுபடுகின்றார்கள். அதன் விளைவுதான் க.பொ.த. சாதாரண தரத்திலும், க.பொ.த. உயர்தரத்திலும் இக்கல்லூரியின் மாணவர்கள் சாதனை படைக்கின்றனர். அதேபோன்று இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபட வைப்பதன் மூலம் சமூகத்திற்கு ஆளுமையுள்ள நற்பிரஜைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தவகையில் இக்கல்லூரி வருடாவருடம் சாதாரணதர, உயர்தர மாணவர் தினங்களை ஒழுங்குசெய்கின்றது. அதனை ஆவணப்படுத்தும் முயற்சியில் 'அறுவடை' சஞ்சிகைகளை வெளியிடுகின்றது. இவையெல்லாம் இக்கல்லூரியின் ஆரோக்கியமிக்க செயற்பாடுகள்.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற இக்கல்லூரியின் மாணவர்கள் இன்னும் இன்னும் இக்கல்லூரிக்கு புகழைத் தேடித்தருவார்கள் என்ற ஆழ்ந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அதேபோன்று அடுத்தடுத்த வருடங்களில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் நல்ல ஆளுமையுள்ள பிரஜைகளாக மாறுவதுடன் கற்றல் செயற்பாடுகளில் ஊக்கத்துடன் ஈடுபட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.
அல்லாஹுதஆலா எங்களின் செயற்பாடுகளை பொருந்திக் கொள்வானாக!
நன்றி!

எம்.ரி.ஏ. தௌபீக்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விப் பணிமனை,
சம்மாந்துறை.

இம்முறை சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் வரலாற்றில் முதற் தடவையாக பல்கலைக் கழகத்திற்கு எழுபத்தைந்து மாணவர்கள் தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்கள். இப்பிரதேசத்திலேயே மற்றப் பாடசாலைகளோடு ஒப்பீடு செய்யும்போது ஆகக்கூடிய மாணவர்களை பல்கலைக் கழகத்திற்கு இப்பாடசாலை அனுப்பியிருக்கிறது என்று மகிழ்ச்சியடையலாம். அல்ஹம்துலில்லாஹ்! கடந்த வருடம் பிர்னாஸ் என்ற மாணவன் தேசிய ரீதியாக கலைத்துறையில் இரண்டாம் இடத்தைப் பெற்று இப்பாடசாலையை பெருமைப்படுத்தியிருந்தார்.

இப்பாடசாலைகளின் சாதனைகளில் சந்தோசமடைவதற்குப் பதிலாக ஒருசில காழ்ப்புணர்ச்சி கொண்ட கல்விமான்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் இன்னும் சில அதிகார வெறியர்களும் இப்பாடசாலையை விமர்சித்து வருவது அண்மைக்காலங்களில் ஒரு பேச்சாக மாறிவருகின்றது. இம்முறை பல்கலைக்கழக பிரவேசம் எல்லோரின் வாயையும் அடைக்க வைக்கும் என்று நம்புகின்றேன்.

இப்பாடசாலை இப்பிரதேசத்தின் சொத்து. இதனை ஆக்கபூர்வமாக விமர்சனம் செய்ய வேண்டும். மேலும் முன்னேறுவதற்கான வழிவகைகளுடன் செயற்திட்டங்களுடன் இதனை அணுக வேண்டும்.

MECSO என்ற அமைப்பைச் சேர்ந்த பழைய மாணவர்கள் க.பொ.த. சாதாரணதர பரீட்சை அடைவில் மேலும் முன்னேற்றத்தைக் காண்பதற்காக செயற்திட்டத்துடன் செயற்பாட்டில் இறங்கியுள்ளார்கள். அவர்களை பாராட்டுகின்றேன். கௌரவிக்கின்றேன். இத்தகைய அணுகுமுறைதான் இன்று தேவை.

பாடசாலை சமூகத்திற்கு உதவும் அதேவேளை சமூகம் பாடசாலைக்கு உதவ வேண்டும். நமது பாடசாலையை நாம் கட்டியெழுப்ப வேண்டும். தேசியரீதியாக மேலும் பிரகாசிக்க வேண்டும்.

இலங்கை முஸ்லிம் பாடசாலைகளுக்கு ஒரு முன் உதாரணப் பாடசாலையாக இப்பாடசாலை பல செயற்திட்டங்களுடன் செயற்பட்டு வருகின்றது. இதற்கு எல்லோரும் ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும்.

உயர்தர மாணவர்களின் உயர்வின் பின்னணியில் நின்ற ஆசிரியர்கட்கும் பிரதி, உதவி அதிபர்கட்கும், உயர்தர மாணவர்கட்கும் என் பாராட்டுக்களும் கௌரவங்களும் உரித்தாகுக.

எச்.எம். பாறூக்,
அதிபர்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தின் சரித்திரத்தில் இன்று மறக்க முடியாத ஒரு நாளாகும். எமது பாடசாலை பல வழிகளிலும் முன்னேற்றப் பாதையில் வீறுநடை போட்டுக்கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் 2008 ஆம் ஆண்டுக்கான உயர்தர மாணவர் தின நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. மிகவும் குறுகிய காலப் பகுதியில் இந்நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தபோதிலும், மிகவும் சிறப்பாக இந்நிகழ்வை மேற்கொள்ள வேண்டும் என உயர்தர ஆசிரியர் ஒன்றியம் தீர்மானித்தது. இதற்கமைவாக 'அறுவடை' சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்ட நானும் எனது பணியை மிகவும் சிறப்பாக செய்ய வேண்டுமென ஆசைப்பட்டேன். கடந்த வருடங்களில் வெளியிடப்பட்ட உயர்தர தின சஞ்சிகைகள் சரியான வடிவில், சஞ்சிகை அமைப்பில் வரவில்லை என்ற விமர்சனம் நீண்டகாலமாக நிலவிவந்தது. இதற்கு முற்றுப்புள்ளிவைக்கும் வகையில் சஞ்சிகை வடிவில் நிறைவான 'அறுவடை' யை வெளியிட்டே ஆக வேண்டும் என்ற ஆதங்கம் எனக்குள் ஏற்பட்டது. எனினும் காலம் குறுகியது. எப்படி சாத்தியமாக்கலாம் என எனது சஞ்சிகைக் குழுவுக்குப் பொறுப்பான ஆசான்களிடம் அளவளாவினேன். அவர்கள் என்னை தட்டிக்கொடுத்தது மாத்திரமன்றி இவ்வாறான முழுமையான சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதற்கான முயற்சியில் இராப்பகலாக உழைத்தார்கள். அந்தவகையில் என் அன்புக்குரிய நண்பர் அஷ்ஷேஹ், அல்ஹாபிழ் ஏ.ஆர்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் என்னோடு தோளோடு தோள் நின்று உழைத்தார். அதேபோன்று கணனி வள நிலையத்தில் கடமையாற்றும் சகோதரர் எம்.பி. ஹசீன் ஆசிரியர் அவர்களும் மிகுந்த அர்ப்பணிப்புடன் உழைத்தார். இவர்கள் இருவரினதும் உழைப்பே இச்சஞ்சிகையின் வெளிப்பாடு என்பதை நான் சொல்லியே ஆக வேண்டும்.

எனது ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஆசிரியையான ஜனாபா. யூ. அபுசாலி அவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். மாணவர்களின் ஆக்கங்களை தகுதிகாணல், அச்சிடப்பட்ட ஆக்கங்களை சரி பார்த்தல் போன்ற பணிகளில் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார். அதேபோன்று இன்னுமொரு சிரேஷ்ட ஆசிரியை ஜனாபா. எம். செய்னுலாப்தீன் அவர்களும் அச்சிடப்பட்ட பிரதிகளை சரிபார்ப்பதில் எனக்கு மிகவும் ஒத்துழைப்பு வழங்கியதுடன் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் வழங்கினார். இவர்கள் இருவரையும் நான் கட்டாயம் சொல்லியே ஆக வேண்டும். அதேபோன்று எமது பாடசாலையின் அரபுக் கஸீதா சரியான உச்சரிப்பில் மாணவர்களுக்கு சேர்க்கப்படாமை நீண்டநாள் குறையாகும். அதனை நிவர்த்திக்கும் வகையில் அதன் மூலப் பிரதியை தேடி எடுத்து இந்த சஞ்சிகையில் வெளிவருவதற்கு உழைத்த மௌலவி எம்.ஐ. ஹஜ்ஜு முஹம்மத் ஆசிரியர் அவர்களுக்கும் அஷ்ஷேஹ் அல்ஹாபிழ் ஏ.ஆர்.எம். உவைஸ் ஆசிரியர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். அதேபோன்று அச்சிடப்பட்ட ஆக்கங்களை சரிகாண்பதில் என்னோடு கடமையாற்றிய மாணவிகளான ஹிறாஷா, றஹ்னாஸ், முனாஜா,நுஸ்ஹா, பர்னாஸ் பேகம், ஜம்லா, றிஷாதா குழுவினருக்கும் எனது ஆழ்ந்த நன்றிகள்.

சஞ்சிகையை அலங்கரிப்பது விளம்பரங்களே. உரியவர்களை இனங்கண்டு விளம்பரங்களை பெற்றுக்கொள்வது என்பது இமாலயச் சாதனையே. அதனை சாதித்த எங்கள் அன்புக்குரிய உதவி அதிபர் எம்.எம். நிஷார்தீன், உயர்தர தின நிகழ்வின் தலைவராக எங்களை வழிநடாத்திய அன்புக்குரிய ஏ.எல்.ஏ. றஹீம் சேர், நண்பர் ஏ.ஆர்.எம். உவைஸ் சேர் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் ஆசிச் செய்தி வழங்கிய பிரதம அதிதி, கௌரவ அதிதி, கல்லூரி அதிபர் ஆகியோருக்கும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், சிந்தனைகள் என பல்வேறு ஆக்கங்களையும் வழங்கியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். விளம்பரம் தந்து உதவிய ஜவாஹிறா ஹார்ட் வயார் உரிமையாளர் அல்ஹாஜ் முகைதீன் பாவா அவர்களுக்கும், சம்மாந்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர், இயக்குநர் சபை உறுப்பினர்கள், பொது முகாமையாளர், உத்தியோகத்தர்களுக்கும், அப்துர் றஹீம் & பிரதர்ஸ் சகோதரர்களுக்கும், சகோதரர் எம்.ஐ. ஸியாத் அவர்களுக்கும், சகோதரர் யூ.கே. நஸீர் (கணக்காளர்) அவர்களுக்கும், சமீம் ஸ்டோர்ஸ் உரிமையாளர் நிப்றாஸ் அவர்களுக்கும், அஸ்கி கிளாஸ் சென்ரர், முஜீப் ஸ்கிரீன் பிறின்டேர்ஸ், பாடசாலை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சகோதரர் அப்துர் றஹீம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதேபோன்று மிகவும் சிறப்பாக அச்சிட்டுத் தந்த றோஸ் பிரிண்டர்ஸ் உரிமையாளர் நண்பர் எம்.ரி. றசூல் ஆசிரியர் அவர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றிகள். எல்லாவற்றிற்கும் மேலாக எனது இயக்கப்பாட்டை வழிநடாத்திய எங்கள் அன்புக்குரிய கல்லூரி அதிபர் எச்.எம். பாறூக் சேர் அவர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றிகள்.

'ஜஸாகல்லாஹு கைறன்'

எம்.ரி. முஸம்மில்,
பிரதம ஆசிரியர்.

## Sammanthurai Muslim Madhya Maha Vidyalayam
## (National School)

Summary Of Results G.C.E. (A/L) - 2007 August

| Sub No | Subject | No.of Sat | A | B | C | S | No.of Pass | Percentage |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | Physics | 99 | 01 | 03 | 25 | 28 | 57 | 57.57 |
| 02. | Chemistry | 99 | 02 | 06 | 23 | 27 | 58 | 58.58 |
| 09 | Biology | 62 | - | 05 | 26 | 17 | 48 | 77.42 |
| 10 | Combined Maths | 37 | - | - | 04 | 17 | 21 | 56.76 |
| 08 | Agriculture | 15 | - | 05 | 05 | 04 | 14 | 93.33 |
| 21 | Economics | 39 | - | 07 | 14 | 15 | 36 | 92.31 |
| 22 | Goegraphy | 18 | - | 05 | 08 | 05 | 18 | 100.00 |
| 23 | Political Science | 39 | 04 | 05 | 19 | 10 | 38 | 97.44 |
| 24 | Logic | 44 | 09 | 14 | 11 | 05 | 39 | 88.64 |
| 29 | Business Studies | 35 | 01 | 02 | 15 | 12 | 30 | 85.71 |
| 30 | Accounting | 35 | - | 04 | 10 | 11 | 25 | 71.43 |
| 44 | Islam | 91 | 11 | 30 | 37 | 12 | 90 | 98.90 |
| 51 | Art | 04 | 02 | 01 | - | 01 | 04 | 100.00 |
| 72 | Tamil | 70 | 11 | 19 | 23 | 10 | 63 | 90.00 |
| 78 | Arabic | 06 | - | - | 02 | 04 | 06 | 100.00 |
| 13 | General English | 226 | - | - | 06 | 18 | 24 | 10.62 |

| Stream | No of sat | No.Of Pass | Percentage |
|---|---|---|---|
| BioScience | 62 | 34 | 54.84 |
| Methemetiics | 37 | 14 | 37.84 |
| Commerce | 35 | 25 | 71.43 |
| Arts | 97 | 85 | 87.63 |
| Total | 231 | 158 | 68.40 |

## Maths (2006/2008)

**Class Teacher :**

**Mr. M.C. Farsan**

M.T. Mohamed Zakir
M.N. Aashik Mohamed
U.L. Mohamed Irfan
A.L. Jibran Nasif
M.S. Sirjul Hasheer
M.A. Sabrin
M.F. Mohamed Rifkhan
N. Sabras
I.L. Mohmed Ithrees
A.L. Siyavor Rahman
H. Sanas
M.A. Hinamullah
A.M. Rifath
S.R. Mohamed Farsad
S.L. Mohamed Shameer
A.L. Mohamed Sathik
A.S.M. Jawath
B. Mohamed Zhibly
A.N.M. Rafik
A.C.M. Fahim
A.L. Fowmin
A.M.M. Ilyas
S.M. Irshad
A.R.M. Thasim
U.L. Abdul Salam
A.L.M. Faris
S. Thava Mayurathan
A. Meethujan

## Bio (2006/2008)

**Class Teacher :**

**Mrs. F.U.A. Razik**

N.M. Halif
M.M.M. Imras
A.R.M. Ramees
A.M. Mohamed Manas
M.S. Siyath Ahamed
A.G.M. Firos
M.T.M. Thanis
A.G. Mohamed Rifas
A.K.F. Sabru Mirnthaj
M.M.M. Muneer
A.M. Arsheek
S.M. Suhail
A.M. Hajmal
M.H. Hamza
U.L. Asmeer
A. Mohamed Sajith
M.A. Mohamed Wafa
M.B.M. Farhan
M.A. Arzad
A.H. Habeebullah
I.L. Nowzad
M.L.M. Siyad
M.S.M. Nabris

S. Fathima Hazeena
M.H. Farhath Najeeha
M.T. Sajitha Farwin
S.T. Jeeniya
I.L. Fathima Sahitha
T. Nusrath Begam
U.L. Rinosa
M.I. Sithi Jusana
M.I. Fathima Arusiya
M.S. Naseeha Begam
I.L. Fathima Sukra
U. Hassana
S. Fathima Imara
K.M. Ismath Banu
A.R. Fasliya

## Commerce (2006/2008)

Class Teacher :

Mr. A.R.M. Ajwath Ali

A.J.m. Luthfi
A.K. Nowsad
A.J.A. Baseeth
S.T. Silmy Mohamed
R.M. Rizwan
A.R. Raseen
M.T.A. Rahman
M.H.M. Sajith
M.A. Sakeer Husain
S.M. Imthiyas
A.L. Nowsad
U.L.M. Riswan
M.H.M. Najimudeen
M.M. Shihan
I.L.M. Arsath
I.L. Siras
A.B. Riyas
M.I.M. Najeem
M.F. Fasarath Farook
A.R.M. Haseen
M.M.M. Suwad
I. Ijaz
M.T.M. Nafrish
M.I.M. Imran
S.L. Najeem
M.T. Gassaly
M.B.M. Aslam Saja
M.I. Rasith
S. Siraj
M.S. Siyahul Shyan

M.H. Fathima Hasna
M.S. Fasmiya

## Arts A (2006/2008)

Class Teacher:

Mov. M.I. Hajji Mohamed

M.I. Asfak Ahamed
A.L. Asmar Atham
M.I.M. Fahim
S.L. Mohamed Sukry
I.L. Sakkey
A.M.M. Aslam
T. Hakeel
R.M. Milhan
M.I.M. Imthiyas
U.L.A. Raheem
A.M. Rifak
U.L.M. Riyas
W.M. Aslam
A.R.M. Nibras
T.M. Jinna
A.C.M. Abras
M.M. Mashook
M.M.M. Arsath
Z.A.M. Zabras
M.S.M. Nowsad
M.I.M. Fowsan
A.M. Aashik
K.L.M. Riyad
A.A. Jaufar
B. Mohamed Mussamil
A.C.M. Arshad
A.G.M. Fairoos
A.A. Mohamed Milfar
A.L.M. Sathan
M.I. Abdul Azeez
U.L. Mohamed Nowfan
A. Asraf
R.M. Sarjoon
A.L.M. Fazmin
M.A.M. Arsath
A.M. Thayeer
I. Anver Sathath
A.B. Imran
K.M. Muneer

## Arts B (2006/2008)

Class Teacher :

**Mrs. Shareefa Nazeer**

A.R. Rifka
A.L. Rinosa
A.B.F. Rifana
I.L.S. Sifana
S. Rifasa
M.B.F. Rizna
K.M. Mumthaj
A.M.I. Shireen
A.J. Famida Sara
A.R.F. Siyama
A.B. Banazir Jahan
M.T. Akeela
A.L. Raheema
M.S.F. Samana
M.F. Saffna
A.r.f. Sifa
A. Farsana
K.R. Rufeena
U.L. Nusrath Jahan
M.I.F. Farhana
M.A.S. Salma
P.M.F. Imrana
A.B.F. Farhana
A.S.F. Ruksana
M.A.F. Janusiya
S.F. Sahitha
I.L.F. Rizwana
I.L. Raksana
A.C.I. Jahan
M.R.F. Nazooha
M.A.F. Ruzna
A.M.F. Mafasa
M.I. Rasiya
S.F. Sifana
A.B. Rizmi
M.T.F. Siyana
M.I. Rinosiya
A.C.N. Sanara
A. Nusrath Bevi
M.F. Fazeela
S.M. Majeetha Farwin
U.L. Najimunisa
M.M.M.F. Jumla
A.F. Rifasa
F. Fahana

## 13 Bio (2007/2009)

Class Teacher :

**Miss. Shithy Raiza**

A.R. Mohamed Rafa
I.L. Manasir Hahshen
A.K.M. Hithayathullah
M.M. Rasith Ahamed
M.I. Bisurul Hafi
A.L. Mohamed Irfan
H.A. Nasli Ahamed
A.L. Azeer Mohamed
A.M. Rinose
M.H. Mohamed Irshad
M.T. Mohamed Natheer
M.T. Mohamed Naleer
S. Rizad

A.T. Nusrath Rumaiza
S. Fthima Sarjana
A.M. Sahiya Banu
A.S. Zahira Begum
M.T. Sabeeha
M.T. Fthima Rajiya
M.A.H. Fathima Sameera
M.T. Ismath Banu
M.L. Fathima Husna
I.L. Nirosa
K. Nafahira
A.R. Asmiya
A.J.F. Fawaza
N. Fathima Rifka
U.L. Fathima Riska
A.M. Ihsana
M.T. Fathima Nisreen
M.N. Fayiza
A.K. Fathima Nifla
A. Najmuniza
M.L. Fathima Shafira

## 13 Commerce (2007/2009)

**Class Teacher :**

**Mrs. M. Zainulabdeen**

A.B. Kaleelur Rahman
M.H.M. Firoos
A.L.M. Sameer
M.A.M. Jabir
A.L.M. Saheed
S.L. Fowsdeen
A.J. Ihsan Ahamed
H.M. Ameen
M.L. Rizad
M.I.M. Asaf
J. Ahamed Irshad
M.M.M. Nibras
A. Sibras
M.F.M. Atheek
A.J.M. Najeem
A.M.M. Faris
S. Sabikaran

N.M. Zimara

## 13 Arts A (2007/2009)

**Class Teacher :**

**Mr. H.M. Anver Ali**

M.L.M. Asaam
M.S.M. Riswan
M.M. Anas
M.R.M. Firthous
S.L.A. Lareef
A.R.M. Zibly
A.J.M. Sathik
A.S.M. Asraf
R.M. Imdad
A.M. Asik
I.M. Rinos
A.N.M. Arshad
N. Isfaque
A.R. Jiraj
V.T.M. Rifas
J. Mafas Mohamed
M.F. Mohamed Tharik
A.L. Asmath Rajeem

A.R. Katheeja
S.L. Mursitha
R. Ramziya
A.R. Sihnas Banu
M.T. Naseeba
A.L.F. Riyasa
M.I.S. Safeena
A.B.F. Farhana
M.M.F. Sanas
A.R. Mursitha
M.L.M. Zabira
A. Rifana
K. Asmiya
A. Shiyama
C.M. Nuskiya Banu
F.F. Nusla
A. Nowsa
M.B. Safana
M.T.F. Banazir
A.G.S. Rishatha

## 13 Arts B (2007/2009)

**Class Teacher :**

**Mr. A.R.M. Uwais**

M.M. Basith
A.H. Haleem
A.I. Ahamed Shameer
A.S.M. Althaf
M.S.M. Rifas
Z. Mohamed Irfan
A.R.M. Rosan
A. Mohamed Farhan

M. Ummu Habeeba
M.M. Farhana
U.L. Fathima Jabeera
A.R. Nazeela
M.Y. Fathima Nisreen
M.I. Fathima Rehnas
A. Fathima Nusha
M.S. Farnas Begum
M.I. Fathima Hirasha
A.R. Fathima Rishadha
M.I. Kanzul Munaja
A. Nazeeha Begum
K.L. Fathima Farwin
M.S. Fathima Rishatha
S.L. Sifana
A.B. Fathima Farhana
A.J. Janoosa
M.K. Benazir Begum
A.F. Jumla Nahar

## 13 Maths (2007/2009)

**Class Teacher :**

**Mr. N.M. Najeem**

A.L. Mohamed Aazeer
I.L. Thareej Ahamed
A.G.M. Mubeen
K.L.M. Roomy
M.I.M. Ashfak
M.H. Mohamed Althaf
M.H. Mohamed Sahakir
M.I. Mohamed Sarjoon
M.A.N.M. Zaheer
M.A. Hamzad
M.M. Rasmee
A.M. Sukry
M.M.M. Muneef
A.W. Mohamed Hunaiz
M.M. Mohamed Nazique
B.M. Anfas
S.M. Rafees
A.H.M. Faheem
M.S. Rifkan Ahamath
M.I. Abdul Baseem
A.R. Mohamed Afrath
M.M. Mohamed Ramzan
M.L. Haneef Mohamed
M.U. Mohamed Shakeel
M.R. Aslam Sujah
U.L.M. Sajith
H.M. Jerufan
M.I. Rizvin
M.I. Mohamed Ibrahim
F.M. Arshath
P.M. Mohamed Fowmin
A.R. Riyas Mohamed
A.A.M. Thaniz

## 12 Maths (2008/2010)

**Class Teacher :**
**Mr. M.C. Farsan**

B.M. Fiham
I.M. Irshad
A.L.M. Arsath
M.J. Ijas Ahamed
M.T.M. Musab
M.I. Ishak
A. Mohamed Najeeb
I.L.M. Imriyas
A.B. Ziyahul Haque
M.I. Ajmal
W.M. Anas
A.R.M. Rifaideen
M.M. Simras
M.S.M. Rasith
H.M. Nasif
A. Mohamed Ali
H. Sakeel
G.M.M. Sadik
M.S.M. Saalim
I.A. Satheek Ali
M.U.M. Salam
M.L.M. Kiyas
M.B.M. Rasmin
A.B.A. Hakeem
F.M. Nasamed
M.I.M. Ferosan
M.B.M. Jibreel
M.I.M. Samroos
R. Imras
T.L. Mohamed Yasir
A.G. Mohamed Rinas
M.A. Mohamed Rizad
M.S. Abdul Raheem
A.R. Riflan
M.S. Ahamed Aman

## 12 Bio (2008/2010)

**Class Teacher :**
**Mrs. F.U.A. Razik**

A.J.M. Sifan
A.R.M. Isthihak
M.A.M. Firas
M.T. Jazeel
M.B.M. Sabir
Y.L.M. Janees
A.M. Ramees
M.I.M. Sakir M.I.M. Saakir
A.L.M. Irfan
A.M.M. Fazil
K.M.M. Jazeel
M.H. Nihal Faris
A.R.M. Riswan

A.F. Jesmine Shakira
A.M. Ifthikar Thuba
R.F. Hirasa
M.C.F. Nusaibah
A.M. Fathima Banu
S.L. Begum Shuhadha
M.L. Sifaya
M.A. Nusrath Sifna
A.J.F. Razina
M.M.F. Shaheeka
M.B. Rifaya
A.K.F. Nisra
A.J.F. Irfana
A.R.F. Shifana
N.Sithy Fowsana
A.M. Safana
S. Nasrin Jahan

## 12 Commerce (2008/2010)

**Class Teacher :**
**Mr. A.R.M. Ajwath Ali**

R. Mohamed Rifkan
M. Mohamed Rifhan
M. Mohamed Nusky
A.R.M. Imran Jamseeth
M.M.Abdul Latheef
A.R. Mohamed Hibathullah
H.R. Mohamed Ismath
U. Mohamed Hajwat
M.T. Abdul Rahman
M.M. Mohamed Saham
S. Riswan
M.S. Mohamed Ashfaque
A. Mohamed Manas
M.I. Mohamed Satheer
P.M. Mohamed Rifad
M.J.S. Mohamed Jabir
V. Prashnan
A.R. Mohamed Nibras
K.R. Mohamed Rifath
M.A. Mohamed Rishad
M.T.M. Sajeeth

## 12 Arts A (2008/2010)

**Class Teacher :**
**Mrs. Shareefa Nazeer**

S.L. Imthiyas Husain
M.H.M. Ameen
A.K.M. Riswan
A. Bisnul Hafi
A.L. Mohamed Yaseer
M.M. Arafath
M.H.M. Hifas

A.R. Fathima Siyana
I.L. Sajitha
T. Fthima Frahath
M.A. Marliya
A. Fthima Sajana
M.S. Fthima Farnas
M.S. Fathima Farhana
M.T. Aroosa
A.B. Fthima Razana
L.T. Ismath Farnas
F. Sareefa Jahan
B. Risfana
M.M. Sithy Fathima
M.I. Arooziya
A.M. Naseela
T. Fathima Asra
S.M. Fthima Farasa

S. Nasrin Jahan

## 12 Arts B (2008/2010)

Class Teacher :

Mr. A.R.M. Ashraff

M.I. Mujahideen
M.I.M. Arshath
M.L.M. Asmir
A.K.M. Ubaithullah
M.A.M. Arshath
M.M. Janoos
U.L.M. Rifaj
M.A.M. Arafath
M.S.M. Arshath
M. Satham Husain
Y.L.M. Fowzan
M.I. Nibras
A.M. Thalif

N.F. Naseeha
M.I.F. Haseena
M.B.F. Nusha
P.M.K. Rifka
A.A. Arsana
A.K. Jahan
H.F. Fazila
M.A.F. Sajitha
Y.L.F. Nusra
A.S.F. Nuha
A.B.F. Hirasa
A.R.F. Razana Banu
A.S. Fahima
M.T.F. Benazir
M.T. Rismiya
A.I.F. Sumaiya
M.T. Risana
M.T.F. Rifka
M.H. Shireen Fasreen

## 12 Arts C (2008/2010)

Class Teacher :

Mr. M.T.M. Musammil

M.I. Thariq
M.I.M. Hazeer
F. Fahim Aslam
A.M. Fahath
N.M. Zuhoor
A.L. Sifas
F. Baqir Ali
A.L.M. Nibras
A.R. Sajith Ali
A.R.M. Rifath
M.L.M. Fowsan
M.M. Sathik
B.M. Asarudeen
M.N.M. Nifras
B.M. Rizald
S.M.M. Aseem
A.G.M. Hilmy
A.R.M. Ashad
A.M.M. Riswan
A.B.M. Niros
A.M.M. Fowzan

A.M.F. Yaseera
M.I.F. Rustaha
A.L. Nashath Aara
I.F. Shifa
A.H. Samila
P.M.F. Rihana
S.T. Rakshana
A. Zameera
M. Shakira Banu
M.I. Thasneem Banu
A.S. Inul Fahitha
M.T. Mowfinisa
A.L. Fathima Asna

# நன்றி சொல்லிப் போகின்றேன் ...

கல்லூரி வாழ்வின்
கடைசித் தறுவாயில்
பல்கலைக் கழகத்திற்குத்
தெரிவாகியிருக்கும் - இந்
நிலையில் - எங்களுக்கு
அறிவை ஊட்டிய
இறைவனுக்கும்,
ஆசிரியர்களுக்கும்,
பெற்றோர்களுக்கும்
இக் கல்லூரிக்கும் - என்
மனமார்ந்த நன்றிகள்
முதலில் !

* * * * * *

பாடத்தைப் பக்குவமாய்
கற்றுவித்து
ஒழுக்கத்தை கண்டிப்புடன்
எடுத்தியம்பி - எங்கள்
வாழ்வுக்கு ஒளியூட்டிய
பல்துறைசார் ஆசிரியர்களே!
என்றென்றும் நன்றிகள்
உங்கள் - பரிணாமக்
கற்பித்தலின் மகிமைக்கு

* * * * * *

ஆசானே!
பசிக்கு உணவு என
கூறிவந்த பரம்பரையில்
பசிதீர அறிவுதனை
ஊட்டுவித்த
உன்னதம் மிக்க
உத்தமர்களேதான் நீங்கள்

* * * * * *

முஸ்லிம் மத்திய கல்லூரியே!
நீர் - ஞானிகள் மேதைகள்
என பல்துறைசார் சேவகர்களை
என்றென்றும் பெற்றெடுக்கும்
சாதனையாளனே ...

* * * * * *

உன் சாதனைகளால் - நீ
இக் கிழக்கில் மட்டுமன்றி
இம் மாநிலம் முழுவதும்
முழு மதியம் போல் - எந்நாளும்
பிரகாசிக்க வேண்டும் என்றும்
என் வாழ்த்துக்கள் ...

* * * * * *

மாணவரின் எதிர்காலம்
மங்களமாய் அமையவென
மாண்புமிகு சேவை செய்யும்
ஆசிரியர்களுக்கும்,

மாணாக்கர் எதிர்காலம்
வளமாய் அமைய
வழிசெய்யும்
இக் கல்லூரிக்கும் - என்
உளம் கனிந்த
நன்றிகள்.

"வாழ்க வளமுடன்
பெருக உங்கள் சேவை"

**ஆதம்பாவா பாதிமா பஸ்மினா**
(கிழக்குப் பல்கலைக் கழக
Visual & Technological Arts என்ற
கற்கை நெறிக்கு தெரிவு
செய்யப்பட்ட மாணவி)

## விழாக் கோலம்

வரலாற்று ஏடுகள் - இன்று
வரைந்து கொள்கின்றது புதுப்பக்கத்தை

சாதனைச் சுவடுகளில்
படிந்து கொள்கிறது சரித்திரப் புகழ்
கல்விக் கூடம் கரைசேர்த்த
கலைச் செல்வங்களை
பல்கலையும் பயில அழைக்கிறது
பல்கலைக்கழகம்
பெருமிதம் கொள்கிறது எங்கள் பாசறை

சம்மாந்துறைத் தாயகம் ஈன்றெடுத்த
செல்வச் சேயாம் தேசிய பாடசாலை
புருவமுயர்த்திப் புகழ் பூத்து
வரவேற்புப் பதாதை அணிந்து
வானிமிர்ந்து நிற்கின்றது வையகம் புகழ
காற்றெங்கும் அதன் கீர்த்தி
காதோரம் கதை பேச
அரங்கேற்றம் நடக்கின்றது
அகம் எல்லாம் குளிர்கின்றது.

ஊரெங்கும் அறிவு மணக்க
உற்றாரும் பெற்றாரும் களி கொள்ள
பூமாலையாய் பாமாலை ஏந்தி
ஈன்றெடுத்த செல்வங்களை
சான்றோனாய் கண்டு
ஆனந்தம் கொள்கின்றது - எங்கள் கல்விக்
கூடம்

மன்றம் எங்கும்
மாணவத் தோரணம் கட்டி
மன்றத்திற்கோர் மணி மகுடமாய்
ஆசான்கள் வீற்றிருக்க
பொன்மாலையும் பூச்செண்டும்
பொலிவு காண இலங்கி
ஆசான்களது ஆசியும் அறிவு கொடுத்தோர்
வாழ்த்தியும் பாட
விழாக் கோலம் பூண்டு - எங்கள் கூடம்
தவழ்கிறது வானலை எங்கும்
தெரிகிறது எதிர்காலம்
இன்னுமோர் தலைமுறையில்.........

செயின் தம்பி சன்பறா

(தென் கிழக்குப் பல்கலைக் கழக
Industrial Information Technology (I.I.T)
என்ற கற்கை நெறிக்கு தெரிவு
செய்யப்பட்ட மாணவி)

## நட்பே

என் உள்ளத்துடன் ஒட்டிப்பிறந்த
இதயத்தைப் போன்றும்
உடலில் கரைந்து போன
கனியுப்புகளாகவும்
இதயத்தில் ஊற்றெடுத்து
ஓடும் உதிரத்துளி போலவும்
மதுவுக்குள் போறை சேர்க்கும்
அற்கோலகவும்

என் இதயத்தின்
இரகசிய நண்பனாகவும்
என் துயரத்தில் பங்கு கொள்ளும்
பரகசிய பங்காளியாகவும்
இருந்தாயே
ஆனால் ஓரிரு வினாடியில்
பிரிவு எனும் துயரக்காற்றை
சுவாசிக்கும் உள்
செய்தியை கேட்டு
என் இதயம் எல்லைகடந்து
துடிக்கிறது

இரத்தக் குழாய்கள்
அணுஅணுவாய் வெடிக்கிறது
என்றாலும் ஓர் ஆறுதல்
பிரிவுகள் நிரந்தரமல்ல
நட்புகள் என்றும் தீர்வதுமல்ல

உந்தன் நன்மைக்காக
நீ போய்த்தான் ஆக வேண்டும்
ஆறுதல் சென்று வா.

எம் பிரிவுகள் சந்திப்புக்களாக
மாறும் அந்தநாளுக்காய்
இனிமைதரும் கனவுகளுடன்
காத்திருப்பேன்

எம்.எம்.எம். நிப்றாஸ்
13 வர்த்தகம்

"நீங்கள் பெண்களிடம் சென்று வருவதையிட்டும் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள். எனது உயிர் எவனிடம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக! ஒரு ஆண் ஒரு பெண்ணுடன் தனித்திருக்கும் போது ஷைத்தான் அங்கு வந்துவிடுவான்."
- தபரானி -

## இஸ்லாமியர் அன்றும் இன்றும்

அன்று
உள்ளத்தில் உறைந்த
குர்ஆன் !
இன்று -
இல்லத்தில் உறங்குது !

அன்று
பஞ்சத்திலும் பூத்தது
இஸ்லாம் !
இன்று -
செல்வத்திலும் கருகியது !

அன்று
இறைவனிடத்தில்
மூச்சும் விலையானது !
இன்று -
வாழ்வே பூச்சியமானது !

அன்று -
பார்வைக்கும் கற்பிருந்தது !
இன்று
விபச்சார அரங்கமானது

அன்று -
இஸ்லாம் செயலோடு
கலந்தது !
இன்று -
நாவோடு இணைந்தது !

அன்று -
பர்தாவுக்குள் இஸ்லாம்
முளைத்தது !
இன்று -
அழுக்குள் அழுகியது.

அன்று
நடத்தைக்கு முஹம்மது (ஸல்)
கண்ணாடி
இன்று -
தன்னில் தகுதி !

அன்று
உள்ளம் திறந்தது !
நாவு மூடியது !
இன்று -
உள்ளம் மூடியது
நாவு திறந்தது !

எம்.ஏ.எப். ஸாஜிதா, 12 B' கலை

## ஆசான்

அன்னை தான் நம் கண்
கண்ட தெய்வம
ஆசான் தான் கல்விக் கண்
திறந்து விட்ட தெய்வம்

கசப்பு என்ற கல்வியை
கற்கண்டாக மாற்றி
தித்திப்பு என ஓடிகற்க
வகை செய்தாய்

கசப்பு என்ற கல்வியை
கற்கண்டாக மாற்றி
தித்திப்பு என ஓடிகற்க
வகை செய்தாய்

பக்க வேராய் இருந்த எமக்கு
ஆணி வேராய் வந்தாய்
திக்கு திசை தெரியா எமக்கு
வழிகாட்டியாய் நின்றாய்

கன்றாய் இருந்த மாணவரை
கையால் நீரூற்றி வளர்த்தாய்
நாளை விருட்சமாக நாமே
நிழல் கொடுத்து வாழந்திடுவோம்

தலைகுனிந்து படித்தால் நாளை
தலை நிமிர்ந்து நடப்போம்
நிலை உயர்ந்து வாழும் போதும்
நின் அன்பை மறவோம்

எம்.டீ.எம். சாஜித்
12 வர்த்தகம்

### நற்சிந்தனைகள்

கோபமாய் பேசாசே
குணம் இழப்பாய்
அதிகம் பேசாதே
அமைதியை இழப்பாய்
வேகமாக பேசாதே
அர்த்தம் இழப்பாய்
வெட்டியாய் பேசாதே
வேலையை இழப்பாய்
ஆணவமாய் பேசாதே
அவமானப்படுவாய்
பொய் பேசாதே
பெயரை இழப்பாய்
சிந்தித்துப் பேசு
சிறப்புக்களை அடைவாய்
அளவுடன் பேசு
அற்புதங்களை காண்பாய்

ஏ.எஸ். நஸ்ஹத் ஆரா, 12C கலை

## நாங்கள் கனிகள்தான்!

திரும்பும் திசையெல்லாம் அவனைச்சுற்றி ஆயிரம் பட்டாம் பூச்சிகள் பறந்துகொண்டிருந்தன... அடிக்கின்ற காற்றுக்கு அசைகின்ற மரக் கிளைகள் அவனை வாழ்த்திப் பூக்களைச் சொரிந்து கொண்டிருந்தன. பஸ்மிர் எத்தனை மணிக்கு அவ்விடத்திற்கு வந்தான் என்பது அவனுக்கே நினைவில்லை. அவன் தனது கரங்களில் உள்ள பரிசுகளையும் சான்றிதழ்களை யும் உற்றுப் பார்த்துக்கொண்டிருக்க அவன் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

பஸ்மிர் ஏழைக் குடும்பத்தில் மூத்தவனாகப் பிறந்து அவன் அனுபவித்த சிரமங்கள் அவனை அழவைக்கவில்லை. தனக்காக உழைத்த தந்தையின் அன்பும் தாய், தங்கைகளின் பாசமும் அவனை ஒரு செல்வந்தனாகவே வாழவைத்தன. ஆனால் அவன் எதிர்பாராதவிதமாக இடியாய் இறங்கிய அவனது தந்தையின் மரணச் செய்தியால் அவன் நிலைகுலைந்து போனான். காலங்கள் கடந்தன. பஸ்மிர் தனது உயர் கல்வியைத் தொடர முடியாது தவித்தான். உறவினர்களும், நண்பர்களும் ஓரிரு நாட்கள் உதவியோடு நின்றுவிட்டனர். ஆனால் அவன் அன்போடு பழகிய அந்த ஆசிரியர் மட்டுமே அவனுக்கு, அவனது கல்விக்கு உறுதுணையாக இருந்தார்.

''பஸ்மிர் நீ கவலையே படவேண்டாம். இறைவன் உனக்கு அறிவைத் தந்திருக்கின்றான்.. முயன்றால் முடியாதது எதுவுமில்லை. நீ கெட்டிக்காரன். நன்றாகப் படிக்க வேண்டும். அல்லாஹ் எனக்குத்தந்த செல்வத்தில் உனக்காக செலவுசெய்வதில் நான் பெருமையடைகிறேன்.... நீ தைரியமாகப் படித்து முன்னேற வேண்டும்... ''

அன்று ஜனூர்தீன் சேர் சொன்ன அந்த வார்த்தைகள் அவனுக்கு தைரியத்தைக் கொடுத்தன. அவர் செய்த தியாகங்கள், உதவிகளோடு பஸ்மின் படித்து முன்னேறினான். அதன் விளைவுதான் பஸ்மீருக்கு இன்று நடந்த இந்தப் பாராட்டு விழா.

''பஸ்மீர் Congratulation ... இந்தப் பாடசாலைக்கு மதிப்பைத் தேடித்தந்த உன்னை வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.....''

''வாழ்த்துக்கள் ..... பஸ்மீர் நீ மென்மேலும் முன்னேற வேண்டும்.... இலங்கையிலேயே முதல் மாணவனாக நீ விஞ்ஞானப்பிரிவில் தெரிவானமை எங்களுக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது .... ''

மலைபோல் குவிந்த மாணவர்களினதும் அன்பான ஆசிரியர்களினதும் பாராட்டுகளும் வாழ்த்துக்களும் பஸ்மிருக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. அவனது மனதும் நினைவும் நிசார் சேரைப் பற்றியே நினைவுபடுத்திக்கொண்டன. திடீரென மரத்திலிருந்து விழுந்த கனியினால் அவனது நினைவுகள் கலைந்தன. உடனே எழுந்த பஸ்மிர் பரிசுப் பொருட்களுடன் தன் வீட்டை அடைந்தான். தன் தாயிடம் பொருட்களை ஒப்படைத்துவிட்டு எதுவுமே பேசாமல் தனது அறையினுள் நுழைந்தவன் தனது ஆசானை நினைத்துக் கடிதம் எழுத ஆரம்பித்தான்.

''எனக்குப் பெற்றோராய் நண்பனாய் சகோதரனாய் இருந்த தங்கமனம்படைத்த ஆசானுக்கு! உங்களுக்கு நன்றி சொல்லவோ பாசத்தைக் காட்டவோ என்னிடம் வார்த்தைகள் இல்லை. ஒரு ஆசான் எப்படிப்பட்ட தியாகி என்பது மிகச் சிறந்த உதாரணம் நீங்கள்தான்.

வேர்கள் மண்ணிலே மறைந்துகொண்டு வெளியே விருட்சத்தை வளர்க்கின்றன. கனிகள், பூக்கள் நிழலைத் தருகின்றன. பார்ப்பவர்கள் புகழப்போவது வேர்களை அல்ல. விருட்சத்தைத்தான். ஆனால் என்னைப் பொறுத்தவரை அனைத்து ஆசான்களுமே வேர்கள்தான். மாணவர்களாகிய நாங்கள் வெறும் கனிகள்தான். நாங்கள் பிறர் பார்வைக்கு பகட்டாக இருக்கலாம். ஆனால் நீர் உறுஞ்சி வேராய் இருந்து எம்மை விருட்சமாக்கியவர்கள் நீங்கள்தான். இந்த உலகம் உள்ளவரை பண்புள்ள உங்களைப்போன்ற ஆசான்களை நேசிக்கும் அனைத்து மாணவர்களும் இதனை உணர்வார்கள்.

என் மதிப்பிற்குரிய ஆசானே! உங்களுக்கு என் நன்றிகளை காணிக்கையாக்குவது எப்படி என்று எழுதமுடியாமல் தவிக்கின்றேன் .... ''

பஸ்மிர் எதிர்பாராதவிதமாக இறையடிசேர்ந்த அந்த இனிய ஆசானை நினைத்ததும் அவன் கண்ணீர் கடிதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. அவன் தன் கடிதத்தோடு எழுந்தான். அவன் தன் ஆசானுக்கு எழுதிய ஆயிரங் கடிதங்களோடு இதனையும் ஒன்றாக வைப்பதற்கு தனது பெட்டியை நோக்கி எழுந்து சென்றான்.

எம்.எல்.எம். அஸ்மித், 12 B கலை

# CARING FOR ELDERS

In srilanka caring for elders has never been a problem. They have always been looked after by their own children or loved ones. But as time moves on and circumstances change problem arise and we have to face these problems too. It is not lack of love or selfishness but lack of finance and space.

As the population booms there are many restrictions that have to be met. They include the basic needs of food water and shelters. When a man marries and leaves his home to set up his own family, he needs to meet their basic needs. When his family is young and both he and his wife go out to work, the elders are welcome. They look after the children while the parents are away. They are very welcome guests. As time goes on the children are older and ready for school and the elders are weaker and need more attention, the trouble begins. Then the growing family needs more space. Children need to be on their own-have their own rooms so that they can attend to their studies in a quiet atmosphere. Then it is the older people who have to make room. So in variably they have to be shifted out either to a relatives or a "home" Then again the question of food. Growing children need more nutritious food. The money is limited so it hits the elders again. Hence to avoid this situation elders prefer to move in to a home.

When the established homes are run well and the elders are cared for in a kind way , the difference between home and home diminishes and the elders settle in happily. Caring for elders is an opportunity to be of service. Being of service is an opportunity of serving god.

Whether the elders are in their own homes or in elders homes serving them is serving god.

**A.L.Nashath Aara**
**12C Arts**

**சிந்தனைத் துளிகள்**

* உண்மை ஊமைதான் அது பேச ஆரம்பித்தால் நிற்காது
* உன்னை உயர்த்திக்கொள்ள விரும்பினால் மற்றொருவரை உயர்த்தி விடு
* கற்கள் என்பதற்காக அதையாரும் ஒதுக்கி விடமுடியாது. நீ ஓர் அறிவுள்ள கலைஞனாக இருந்தால் கற்களைப் பயன்படுத்தி அழகான கட்டடத்தை கட்டி எழுப்பலாம்
* கவலைகள் உன்னில் வாழலாம். ஆனால் நீ கவலைகளுக்குள் வாழாதே
* துன்பமில்லாமல் இன்பத்தை அடைந்தவனுக்கு அவடைந்தே இன்பமே ஒரு நாள் துன்பமாகலாம்
* அன்பின் ஆழம் எவ்வளவு என்பதை பிரிவின் போதுதான் உணர முடியும்
* மனித சமுதாயத்திடம் நம்பிக்கை இழக்ககூடாது சமுதாயம் ஒரு கடல் ஒரு சில துளிகள் அசுத்தமாக இருப்பதால் கடல் முழுவதும் அசுத்தமாக இருக்கும்
* இந்த உலகில் நாம் பிறந்து எதையாவது செய்து முடிக்கத்தான் சோம்பலுடன் உட்காந்து கவலைப்பட அல்ல
* உண்மையாக நடப்பதால் துன்பங்கள் குவிகின்றன என்பதற்காய் பொய் வாழ்வைத் தேடாதே. நிலைத்து நில்லாத பெரிய மணல் மேடுகளைவிட சிறிய கற்பாறையை தேடு. இடையூறுகளைக் கண்டு கண் கலங்காதே இடையூகளில்தான் உனது வீரமும் தயாகமும் மனப்பக்குவமும் உயர்ந்த நோக்கங்களும் வளர்கின்றன.

**A.L. Fathima Asna**
**Arts 12 C**

# இன்றைய உலகில் கணனி - தகவல் தொழிநுட்பம்

பொங்கிப் பிரவாகிக்கின்ற கற்பனைகள் எல்லாம் நிஜம் என்று எண்ணத் தோன்றுகின்ற இன்றைய அதிசய உலகில் அனைத்தும் விந்தையே. புதிது புதிதாக அறிமுகமாகும் தொழிநுட்பங்கள் எல்லாம் மனித மூளையின் சிருஷ்டிதானா என்ற பிரமிப்பை ஏற்படுத்துகின்றது. நாமும் அந்தளவிற்கு முன்னேறிவிட வேண்டுமென்ற உந்துதலை தருகின்ற இன்றைய வளர்ச்சி ஒரு புறம் இந்த எண்ணத்தை தவிடு பொடியாக்கும் சூழ்நிலைகள் மறுபுறம்.
கணனி உலகில் இத்தனைக்கும் மத்தியில் எதையாவது சாதித்து விட வேண்டும் என்று இன்றைய புதிய தலைமுறை துடித்துக் கொண்டிருக்கின்றது.
காலத்தின் கட்டாய தேவையாகிவிட்ட கணனியை வீட்டுக்கு வீடு சர்வசாதாரணமாக காணக்கூடியதாக இருப்பது இன்றைய யுகத்தில் அதிசயமல்ல.
இன்று கணனி இல்லாத இடமே இல்லை என்று கூறும் அளவுக்கு எங்கும் கணனி தன் ஆதிக்கத்தை கால் பரப்பியுள்ளதை காணலாம். நாம் வாழ்ந்து கொண்டிருப்பது கணனியுகத்தில்... சாதாரணமான சிறிய கடைகளில் ஆரம்பித்து அலுவலகங்கள், வங்கிகள், விமான நிலையங்கள், பாடசாலைகள் என கணனியின் பயன்பாட்டு எல்லையை விரித்துக் கொண்டே செல்லலாம்.
இவ்வாறான ஒரு யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவருமே கணனிபற்றி அறிந்து கொள்ளவும் அதை பயன்படுத்த தெரிந்து கொள்ளவும் ஆர்வ மேலீட்டுடன் உள்ளனர்.
உலகின் தொழிநுட்ப வளர்ச்சிக்கமைய நாடுகள் தமது இளைஞர் சந்ததியினருக்கான பாடசாலை பாடத்திட்டத்தினையும் மாற்றிகொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கமைவாக இன்று ஏற்பட்டிருக்கும் தகவல் தொழிநுட்ப வளர்சிக் கேற்ப இலங்கையின் பாடத்திட்டத்திலும் இப்பாடம் புகுத்தப்பட்டுள்ளது. உயர்தர வகுப்பில் அறிமுகம் செய்யப்பட்ட பொது தகவல் தொழிநுட்ப பாடம் தற்போது சாதாரண தர வகுப்புகளிலும் கற்பிக்கப்படுகிறது. காலத்தின் தேவை கருதியும் எதிர்கால சமுதாய நலன் கருதியும் நகரங்களிலுள்ள பாடசாலைகளோடு கிராமப்புற பாடசாலைகளும் கல்வியில் சம வாய்ப்பினை பெற வேண்டும் என்பதற்காக கல்வியமைச்சு பல புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தி வருகின்றது.
இன்று பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் என்ற எல்லையை கடந்து எல்லா இடங்களிலும் எல்லோராலும் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய அம்சமாக தகவல் தொழிநுட்பம் வளர்ச்சி கண்டுள்ளது.
இன்று பாடசாலைகளில் கணனிகற்கை நிலையம் (CLC) உருவாக்கப்பட்டு வலைப்பின்னல் (School Net) அமைப்புகளையும் ஏற்படுத்தி பாடசாலை தகவல்களை வலைப்பின்னலின் ஊடாக பரிமாறுகின்ற அளவுக்கு தகவல் தொழிநுட்பம் விரிவடைந்து வருகின்றது. மின்சார வசதியற்ற பிரதேசங்களிலும் சூரிய ஒளிமூலம் பெறப்படும் மின்வலுவில் கணனிகளை இயக்கவைத்து செயற்படும் கல்வியுலகில் நாம் உள்ளோம்.
80, 90 களில் கைக்கெட்டாத காட்சிப்பொருளாக தோன்றிய கணனி இன்று மேசையில் (Desktop), மடியில் (Laptop), உள்ளங்கையில் (Palmtop) என தவழ்கின்றது. தட்டச்சு இயந்திரம் போன்று கருதப்பட்ட கணனி வியத்தகு காரியங்களை விரைவாகவும் சரியாகவும் நிறைவேற்றி விந்தைகள் புரியும் இயந்திரமாகிவிட்டது.
இன்றைய உலகில் அன்றாட செயற்பாடுகளில் Internet & e.mail,e-Banking ,e-channalling, e-commerce, e-mobile, e-Security என்று வரிவடைந்துள்ளது அதற்கும் மேலாக Web Camera, Video conferencing, Bluetooth,Infrared,Barcode Reders, Barcode printer, Tuch Screen, Finger print Scanner போன்ற தகவல் தொழிநுட்ப சாதனங்களின் பயன்பாடும் அதிகரித்து தகவல் தொழிநுட்பம் பரிமாண வளர்ச்சி பெற்று செழிப்புற்று அதன் எல்லைகள் இன்னும் விரிவடைந்தே செல்லும் என்பதில் சந்தேகமில்லை.

எம்.பி.ஹசீன்,
தகவல் தொழிநுட்ப பாட ஆசிரியர்
கணனி வள நிலையம்(CLC)

## விடைதா என் விடியலே

இம்மண் பதியின்
கலங்கரையாம் - எம்
மத்திய கல்லூரியே - உன்
பெயரிலோர் 'மத்திய' எனும்
மகத்துவமும்
மறைந்திருப்பதாலா?
இன்னும் உனக்கு
தேசிய கல்லூரி என்னும்
வாசகமும் சூட்டினர்

அழகுக்கு அழகு சேர்க்கும்
அந்த ஆலமரத்தில் தான்
அத்தனை உண்மையும்
ஆழப் புதைந்துள்ளது
எத்தனையோ பட்சிக்கு - நீ -
எளிதாய் புகழிடம் கொடுத்தாய்
அத்தனை விழுதையும் - நீ
எதற்காகவோ இப்படி விதித்தாய்?
பதியின் கண்ணாம்
பள்ளியும் அப்படித்தான் - என
படிப்பினை ஊட்டவா?

கல்வித் தாகத்தைக்
கனிவுடனே தணிக்கும்
செப்படி வித்தையை
அப்படியே செய்வதில் - நீ
ஆலமரம் தான்

ஆசான் என்னும் விழுதால்
அன்புடனே அரவணைத்து
அறிவு புகட்டுவதில் - நீ
அந்த ஆலமரத்தின்
அழகான விழுதேதான்

கல்லூரியின் முதல்வனே !
கம்பீரத்தின் தலைவனே ! - உம்
நடையிலோர் நேர்மை
கதையிலோர் கூர்மை
அறிவில் நல்ல் ஆள்மை
அத்தனையும் இணைந்து
அதிபர் பதவிக்கு - நீரே
அதிக பொருத்தமென
அதிரடியாய் உரைப்பதென்ன

அறிவு நிறை ஆசான்கள்
நீங்கள் - என்றும்
அன்பு பெட்டகத்தின்
அடிப்படைகள்
கல்வி,தொழுகை,சேவை என்னும்
கடமை கொண்ட - இக்
கல்லூரி வாசஸ்தலத்தின்
கனிவான காவலர்கள்

ஓய்விலும் கொஞ்சம்
ஓயாமல் அறிவளிக்க
ஓய்யாரமாய் காட்சி தரும்
வசதியுடன் கூடிய - நல்ல
வாசிகசாலை
நவீன யுக சவாலையும்
நளினமாய் முறியடிக்கும்
காலத்தின் தேவைக்கேற்ற
கட்சிதமான கணணி அறை
இடைவெளியில் கொஞ்சம்
இனிமையாய் இன்பம் காண
இனிப்பும் உறைப்பும்
இணைந்தே இருக்கும் அந்த
சிற்றுண்டிச் சாலை
வீட்டுப் பிரச்சினையும்
விரட்டியே ஓடவிட்டு - இனிய
விருந்தொன்றை
விழிகளுக்கு சமர்ப்பிக்கும்
விரிவான பூங்காக்கள்
திறமைக்கு களம் அமைக்க
திடமாக முன்னேறித்
தடம் பதிக்க வழிவகுக்கும்
தனியான ஆராதனை மண்டபம்
மத்தியில் அமைந்து
மயில் கல்லாய் இருந்து
மாணாக்கரை ஆர்வமூட்டும்
மாபெரும் மைதானம்

அனைத்தையும் பல ஆண்டு
அனுபவித்துப் பயன்பெற்று
அட்வான்ஸ் லெவலில்
கணம் கொண்ட மனதுடன்
கண்ணீர் கொண்ட விழியுடன்
விதிபோட்ட ஆணையால்
விடை கேட்டேன்
விடைகள் என் விடியலே

**A.B.** பெனாசிர் ஜஹான்
$13^{B}$ கலை (2008 **Batch**)

A/L Day 2008 ல் பாராட்டி கௌரவிக்கப்பட்ட விசேட நன்றிக்குரிய மாணவர்கள் விபரம்.

| | | |
|---|---|---|
| 01. | I.L.M. SABRI | 154, Kal, 3rd Rd, STR |
| 02. | S.L. RIMOES | 347/B, Ampara Rd, STR |
| 03. | S.M. RUMAIS | Raawunthan Lane, STR-06 |
| 04. | M.R.M. RASMI | 1073 A, Polistation Rd, STR |
| 05. | B.M. IRFAN | 391 M.P.Rd, STR |
| 06. | M.A.H. SAMSATH BEGUM | 449 A, 1st Cross Street, STR |
| 07. | M.M.M. SUFAD | 463, Gaffoor G.S.Lane, STR |
| 08. | A.L. IMTHIYAS AHAMED | 10, Mal 3rd Rd, STR |
| 09. | B. FATHIMA ASMIYA | 50A, Ameer Ali North Rd, STR |
| 10. | A.M. AHAMED ZAKEE | Thaika Mosque Road, STR |
| 11. | A.R. NALEEMIYA | 27 A, Grane Mosque Rd, STR-08 |
| 12. | M.L. FATHIMA RUKSHANA | 87/2, Bazar Street, STR-06 |
| 13. | A. FATHIMA RASMIN | 72/A, T.C.Rd, ISA Lane, STR |
| 14. | M. MOHAMED NASLOON | 83/1, Hijra 5th Rd, STR |
| 15. | M.I. KANZUL IFTHIKA | Lake Rd, STR |
| 16. | M.I. IRSHATHA | 14/A, Lake Rd, STR |
| 17. | A.M. IHJAS BANU | 329/1A, Thaikka New Rd, STR |
| 18. | L.T. ISSATH FARZANA | 318/1, Thaikka Mosque Road,STR |
| 19. | S.L. FASLOONA | 339/A, Thaikka Road, STR |
| 20. | A.FATHIMA FAZMINA | 13 A/3, Hijra 10th Lane, STR |
| 21. | M.T. RIFASA | 36, Hospital 6th Road, STR |
| 22. | A.L.M. AARIF | 274 A, Veeramunai Rd, STR |
| 23. | A.R. ZANAS NUSRA | Dharul Nusra Malkampity Rd, STR |
| 24. | S.M.B.M. RIZAD | 148, Mal 13th Lane, STR |
| 25. | S. SANFARA | 177/1, National School Rd, STR |
| 26. | K.L. MOHAMED SABRY | 45, T.C.Rd, STR |
| 27. | A.L. FAISAL | 32, Block 'J' West, Mal 15th Rd, STR. |
| 28. | M.H.M. AMJATH KHAN | 426/2, Pilawadi Lane, STR-07. |
